## எமது மைலேஜ் பங்காளி விமான சேவைகள் மூலம் 5 X வான் மைல்களை சம்பாதியுங்கள்

நியூயோர்க்கிற்கான வியாபாரப் பயணம், பரீஸ் நகருக்கான விடுமுறைப் பயணம், சிங்கப்பூருக்கான ஷொப்பிங் பயணம்... இப்படி அடிக்கடி வெளிநாடு செல்வதை வழக்கமாகக் கொண்ட உங்களுக்கு.

HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட் ஒவ்வொரு வெளிநாட்டுப் பயண தொடர்பிலும் சன்மானம் வழங்கும். மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களுக்குத் தாராளமான முறையில் சன்மானம் வழங்குவதில் நாம் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம். நீங்கள் உங்களது HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட்டைப் பயன்படுத்தி இணையத்தளத்தின் ஊடாக எமது மைலேஜ் பங்காளி விமான சேவை நிறுவனம் ஒன்றில் விமானப் பயணச்சீட்டைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொரு தடவையும் நாம் உங்களுக்கு 5X வான் மைல்களை வழங்குவோம்.

இந்த ஆவணத்தின் ஆங்கில அல்லது சிங்கள பிரதி உங்களுக்குத் தேவைப்படின், தயவுசெய்து www.hsbc.lk என்ற எமது இணையத்தளத்தை நாடவும். அல்லது எமது கிளையொன்றில் கேட்டுப் பெறவும்.

மைலேஜ் பங்காளி விமான சேவைகள் உங்கள் அடுத்த பயணத்திற்கான விமானச் சீட்டை இணையத்தளத்தின் ஊடாக பின்வரும் எமது மைலேஜ் பங்காளி விமான சேவை நிறுவனம் ஒன்றில் கொள்வனவு செய்து, 5X வான் மைல்கள் வரை சம்பாதியுங்கள். நீங்கள் செலவிடும் ஒவ்வொரு ரூ.100/- க்கும் 5 ரிவோட்ஸ் புள்ளிகளைப் பெறலாம். இப் புள்ளிகளை, நீங்கள் விரும்பும் மைலேஜ் திட்டத்திற்கு மாற்றிக்கொள்ள முடியும்.

கத்தே பசிபிக் எயார்வேய்ஸ்
கட்டார் எயார்வேய்ஸ்
சிங்கப்பூர் எயார்லைன்ஸ்
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்

**விதிகள் மற்றும் நிபந்தனைகள்**

- ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் லிமிட்டட்டின் (இனிமேல் “வங்கி” என்று அழைக்கப்படும்) விமானச் சீட்டுக்களுக்கான சிக்னேச்சர் 5X ஊக்குவிப்புத் திட்டத்தில் (இனிமேல் “ஊக்குவிப்புத் திட்டம்” என்று அழைக்கப்படும்) HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட் வைத்திருப்பவர்கள் (“கார்ட் வைத்திருப்பவர்கள்”) அனைவரும் பங்குபற்றலாம்.
- இந்த ஊக்குவிப்புத் திட்டத்திற்குத் தகுதி பெற, கார்ட் வைத்திருப்பவர்கள் தமது HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட்டை பயன்படுத்தி பின்வரும் விமான சேவை நிறுவனமொன்றில் அந்தந்த இணையத்தளத்தின் ஊடாக விமானச் சீட்டைக் கொள்வனவு செய்ய வேண்டும்: கத்தே பசிபிக் - www.cathaypacific.com, சிங்கப்பூர் எயார்லைன்ஸ் - www.singaporeair.com, கட்டார் எயார்வேய்ஸ் - www.qatarairwats.com, ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் - www.srilankan.lk
- இந்த ஊக்குவிப்புத் திட்டத்திற்குத் தகுதி பெறும் கார்ட் வைத்திருப்பவர்களினால் தகுதியுள்ள கொடுக்கல் வாங்கலில் செலவிடப்படும் ஒவ்வொரு நூறு இலங்கை ரூபாய்க்கும் (ரூ.100/-) 5 ரிவோட்ஸ் புள்ளிகள் வழங்கப்படும். இதன் மூலம் கார்ட் வைத்திருப்பவர்கள் 5X வான் மைல்களுக்கு உரித்துப் பெறுவார்கள்.

- கார்ட் வைத்திருப்பவர்கள் தாம் சம்பாதித்த ரிவோட்ஸ் புள்ளிகளை, மேற்குறிப்பிட்ட விமான சேவை நிறுவனங்களின் “அடிக்கடி விமானப் பயணம் செய்வோர்” திட்டமொன்றில் வான் மைல்களாக மாற்றிக்கொள்ளலாம். 1 புள்ளி 1 வான் மைலுக்குச் சமமாகும்.

- ஒவ்வொரு கார்ட் கணக்கின் பேரிலும் மாதமொன்றிற்கு ஆகக் கூடுதலாக 20,000 ரிவோட்ஸ் புள்ளிகள் வழங்கப்படும் (கார்ட் கணக்கு என்பது பிரதான கார்ட் மற்றும் மேலதிக கார்ட்கள் உட்பட ஒரு கணக்கின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள கார்ட்களையும் குறிக்கும்).

- கார்ட் வைத்திருப்பவர்கள் தமது ரிவோட்ஸ் புள்ளிகளை வான் மைல்களாக மாற்றுவதற்கு முன்னர், உரிய “அடிக்கடி விமானப் பயணம் செய்வோர்” திட்டத்தில் தம்மைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

- கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற மாதத்தை அடுத்த மாதத்தின் 20ஆம் திகதிக்குள் உங்கள் HSBC வீசா சிக்னேச்சர் கிறெடிட் கார்ட் கணக்கில் போனஸ் ரிவோட்ஸ் புள்ளிகள் சேர்க்கப்படும்.

- இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம் சம்பாதிக்கப்படும் போனஸ் புள்ளிகளுக்கும் HSBC ரிவோட்ஸ் திட்டத்தின் பொது விதிகள் மற்றும் நிபந்தனைகள் (http://www.hsbc.lk/1/2/personal/credit-card/tewards-terms-and-conditions என்ற இணையத்தளத்தில் கிடைக்கும்) பிரயோகிக்கப்படும்.

- இந்த ஊக்குவிப்புத் திட்டம் தொடர்பான சகல எழுத்துமூல தொடர்புகளும் "கார்ட்ஸ் லோயல்டி முகாமையாளர், HSBC, இல.24, சேர் பரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு 1 என்னும் முகவரிக்கு மேற்கொள்ளப்பட வேண்டும். 4 4722 75 என்ற தொலைபேசி இலக்கத்தின் மூலம் HSBC அழைப்பு நிலையத்திலும் personalbanking@hsbc.com.lk என்ற மின்னஞ்சல் ஊடாகவும் விசாரணைகளை மேற்கொள்ளலாம்.

- இந்த ஊக்குவிப்புத் திட்டம் தொடர்பாக இங்கு தெரிவிக்கப்பட்டுள்ள விதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளிட்ட விதிகள் மற்றும் நிபந்தனைகள் அனைத்தையும் அல்லது அவற்றில் ஏதேனுமொன்றை திருத்த, மாற்ற அல்லது மீளப்பெற HSBC உரிமை கொண்டுள்ளது. வங்கி அது பற்றி விபரக்கூற்றுத் தகவல் மூலம் கார்ட் வைத்திருப்பவர்களுக்கு அறிவிக்கும்.

- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எதனையும், எதிர்காலத்திலும் இது போன்ற ஊக்குவிப்புத் திட்டங்களை மேற்கொள்ள அளித்த வாக்குறுதியாகவோ முன்னுதாரணமாகவோ கொள்ள முடியாது.

- இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் மற்றும் அல்லது இந்த ஊக்குவிப்புத் திட்டம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் ஏதேனும் சர்ச்சை ஏற்படின், HSBC இன் தீர்மானமே முடிவானதாக இருக்கும்.

- HSBC ஆனது இந்த ஊக்குவிப்புத் திட்டத்தின் கீழான சேவைகளின் வழங்குநா் அல்ல என்பதால், அத்தகைய சேவைகளின் தரம் தொடா்பாக எவ்வித பொறுப்பேற்பையோ, உத்தரவாதத்தையோ, வாக்குறுதியையோ வழங்க மாட்டாது.

- இந்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் இலங்கைச் சட்டங்களினால் ஆளுகை செய்யப்படுவதுடன், அவற்றிற்கு அமைவானவையாகவும் கொள்ளப்படும்.

வெளியீடு: ஹொங்கொங் அன்ட் ஷங்காய் பாங்கிங் கோப்பரேஷன் - ஸ்ரீலங்கா.